பக்கங்கள்:09 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 29 வியாழக்கிழமை 14.07.2022 கதிர் 251

இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பதவி விலகல் தொடர்பான அறிவிப்பைப் பலரும் எதிர்பார்த்து இருக்கின்ற போதிலும், அது இன்னும் நடக்கவில்லை. இப்போதைக்கு அவர் தமக்கு பதிலாக, இதுவரைப் பிரதமராக இருந்த ரணில் ☞2

# இராஜினாமா செய்வதை இழுத்தடிக்கும் கோட்டா!



★ தான் வெளிநாட்டில் நிற்பதால் பதில் ஜனாதிபதி ரணிலே என்று வர்த்தமானி ஊடாக அவர் அறிவிப்பு

★ சிங்கப்பூர் சென்றடைந்ததும் கோட்டா =பதவி துறப்பார் என்கிறார் சபாநாயகர்

தனது வெளிநாட்டுப் பயணத்தின் இறுதி இலக்கை இன்னமும் அடையாத காரணத்தால் பதவி விலகலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இழுத்தடித்து வருகின்றார். ☞2

## கோட்டாவை உடன் திருப்பியனுப்பக் கோரி மாலைதீவில் இலங்கையர்கள் ஆர்ப்பாட்டம்





மாலைதீவில் வசிக்கும் இலங்கையர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மாலைதீவு ஜனாதிபதி இப்ராஹிம் சோலியின் வீட்டுக்கு அருகில் அவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ☞2

## அனைவரும் ஏற்கும் பிரதமரை நியமிக்குக

**சபாநாயகருக்குப் பதில் ஜனாதிபதி அறிவுறுத்து**



ஆளுங்கட்சி அல்லது எதிர்க்கட்சியில் இருந்து அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் பிரதமர் ஒருவரை நியமிக்குமாறு பதில் ஜனாதிபதியான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு ☞2

## ரணில் உடன் பதவி விலக வேண்டும்!



**சபாநாயகர் தலைமையிலான கூட்டத்தில் கட்சித் தலைவர்கள் கூட்டாக வலியுறுத்து**

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்று கட்சித் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில், நாடாளுமன்றத்தில் நேற்று மாலை நடைபெற்ற விசேட கட்சித்தலைவர்கள் கூட்டத்திலேயே இந்த வலியுறுத்தினர்.

எனினும்,நேற்றைய கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பினர்கள் பங்கேற்கவில்லை.

## அதிகாலை 5 மணி வரை நாடு முழுவதும் ஊரடங்கு


நாடு முழுவதும் நேற்றிரவு முதல் இன்று அதிகாலை 5 மணி வரை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பான விசேட வர்த்தமானி அறிவித்தலை நேற்றிரவு 9 மணியளவில் வெளியிட்டிருந்தார்.

முன்னதாக, மேல் மாகாணம் முழுவதும் நேற்று நண்பகல் முதல் மறு அறிவித்தல் வரை ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், நேற்றிரவு 9 மணி முதல் இன்று அதிகாலை 5 மணி வரை நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

## அமைதியைப் பேண ஒத்துழைப்பு வழங்குங்கள்

**போராட்டக்காரர்களிடம் சவேந்திர சில்வா வேண்டுகோள்**



நாட்டில் அமைதியையும் பாதுகாப்பையும் பேணுவதற்கு முப்படையினருக்கும் பொலிஸாருக்கும் ஒத்துழைப்பு வழங்குமாறு அரச எதிர்ப்புப் போராட்டக்காரர்களிடம் பாதுகாப்புப் படைகளின் தலைமை அதிகாரி ஜெனரல் சவேந்திர சில்வா வேண்டுகோள் விடுத்துள்ளார். ☞2

## ஆர்ப்பாட்டக்காரர்கள் - படையினர் மோதல்; நாடாளுமன்றப் பகுதியில் நேற்று பதற்றம்!

**35 பேர் வைத்தியசாலையில் சேர்ப்பு**



நாடாளுமன்றப் பகுதியில் நேற்று மாலை பாதுகாப்புப் படையினருக்கும் அரச எதிர்ப்புப் போராட்டக்காரர்களுக்கும் இடையில் மோதல் நிலை ஏற்பட்டது. இதனால் அங்கு பதற்றமான நிலைமை நிலவியது.

இந்த மோதலில் இரு தரப்பிலும் பலர் காயமடைந்தனர். 35 பேர் கொழும்பு ☞2


## அரச தொலைக்காட்சி நிறுவனங்களும் போராட்டக்காரர்களால் நேற்று முற்றுகை

**ஒளிபரப்புகள் இடைநிறுத்தம்**

பதில் ஜனாதிபதியாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து கொழும்பில் போராட்டங்கள் தீவிரமடைந்துள்ளன.

இந்த நிலைமையில் அரச தொலைக்காட்சி நிறுவனங்களையும் போராட்டக்காரர்கள் சுற்றிவளைத்து வருகின்றனர்.

இதனால் தேசிய தொலைக்காட்சியான ☞2




## தமிழ்த் தலைவர்களை ஒன்றுபட மதத் தலைவர்கள் வலியுறுத்து!



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூலை 14

தற்போதைய நெருக்கடி நிலையில் தமிழ்மக்களின் பிரச்சினைக்கான தீர்வை முன்வைப்பதற்கு அனைத்துத் ☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
விக்கிரமசிங்கவை அப்பதவியை ஆற்றுவதற்கு நியமித்திருக்கிறார். அதற்கு அரசமைப்பில் இடம் உண்டு.

ஜனாதிபதிப் பதவியைத் தாம் ஆற்ற முடியாது என்ற காரணத்தின் அடிப்படையில் பதில் ஜனாதிபதியாக நாட்டின் பிரதமரை ஜனாதிபதி நியமிக்க முடியும். அது எவ்வளவு காலத்துக்கு என்பதற்கும் வரையறை ஏதும் இல்லை. ஆகவே இந்தப் பதில்நியமனத்துக்கு கால வரையறை இல்லை. கோட்டாபய ராஜபக்ஷ தமது பதவிக்காலம் முடியும் வரை கூட ரணிலைப் பதில் ஜனாதிபதியாகக் கடமையாற்ற அனுமதிக்க முடியும்.

எனினும் பெரும்பாலும் இன்று ஜனாதிபதியின் ராஜினாமாக் கடிதம் சபாநாயகருக்குக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்படித் தம்முடைய பதவியை இராஜினாமாச் செய்வதை கோட்டாபய ராஜபக்ஷ இழுத்தடிப்பதற்குக் காரணங்கள் உண்டு. தான் இறுதியாகச் சென்று தங்கப் போகின்ற நாட்டை அடைவதற்கு, ஜனாதிபதி என்ற அவரது பதவி நிலை அவருக்கு உதவியாக இருக்கும். அதனால் தான் அந்தப் பதவி நிலை வேசத்தை அவர் துறப்பதைப் பிற்போட்டு வருகிறார்.

மாலத்தீவில் இருந்து சிங்கப்பூர் செல்லும் ஜனாதிபதி கோட்டா ராஜபக்ஷ, அந்நாடு ஊடாக மத்திய கிழக்கு நாடு ஒன்றை சென்றடைந்து, அங்கு நிலையாகத் தங்க இருக்கிறார்கள் என்று தெரிகிறது. பெரும்பாலும் இன்று அந்த நாட்டைச் சென்றடைந்ததும் அவரது பதவி நிலை ராஜினாமா கடிதம் சபாநாயகரை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதை அடுத்து ரணில் விக்கிரமசிங்க தற்காலிக ஜனாதிபதியாகப் பதவியேற்பார், அடுத்த சில தினங்களில் இப்போதைய ஏற்பாடுகளின் படி புதிய ஜனாதிபதித் தேர்வு நாடாளுமன்றில் இடம் பெறும்.

ஆளுங்கட்சி தரப்பினர்களில் கணிசமான ஆதரவோடு அந்த ஜனாதிபதி பதவியை ரணில் முழுமையாகக் கைப்பற்ற கூடிய நிலைமை இருப்பதாக தெரிகிறது.

எனினும் அவர் ஜனாதிபதிப் பதவியில் இருப்பதற்கு எதிரான போராட்டங்கள் தீவிரமடையும் ஏதுநிலைகள் தென்படுகின்றன. மறுபுறத்தில் அத்தகைய போராட்டங்களை இரும்புக் கரம் கொண்டு அடக்கி, வழமையான ஆட்சி நிலையைக் கொண்டு வருவதற்கு ரணில் உத்தரவு பிறப்பிக்கத் தயாராகி வருகிறார் என உள் விட்டு வட்டாரங்களில் பேசப்பட்டது. ஆனாலும் ரணில் பதில் அல்லது தற்காலிக பதவி நிலையைத் துறந்து, அவற்றைத் தொடர்ந்து நிரந்தர ஜனாதிபதி பதவியில் அமர்வாரெனின் அவற்றில் – அதற்கு எதிரான – மக்கள் போராட்டமும் எழுச்சி கொள்வதற்கான வாய்ப்புகளும் அதிகம் உள்ளன.

இதற்கு இடையில் பதில் ஜனாதிபதிப் பதவியைத் துறந்து அமைதியான அதிகார மாற்றத்திற்கு வழி செய்யும் படி பல தரப்புகளிலிருந்தும் ரணிலுக்கு அழுத்தம் கிடைத்து வருகின்ற போதிலும் அவர் அதை ஏற்பவராக இல்லை. பதவியில் தொடர்வேன் என்பதில் பிடிவாதமாக இருக்கிறார்.

நேற்று சுமார் 15 நிமிட நேரம் தொலைபேசி மூலம் ரணிலுடன் தொடர்பு கொண்டு, பதவியை ராஜினாமாச் செய்து சுமூக நிலைக்கு ஒத்துழைப்பு நல்கும்படி கூட்டமைப்புப் பேச்சாளர் சுமந்திரன் கோரிக்கை விடுத்தார் என அறிய வந்தது. எனினும் ரணில் அதற்கு இணங்கவில்லை, இதே வேளை இலங்கை விவகாரத்தில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய பல முக்கிய நாடுகள் மற்றும் தரப்புகளிடமிருந்தும் கூட இத்தகைய அழுத்தம் ரணிலுக்கு வந்த போதிலும் அவர் அவற்றுக்கு இணங்குவதில்லை என்று ஒற்றைக்காலில் பிடிவாதமாக இருக்கிறார் என அறிய வந்தது. இந்தப் போக்கின் விளைவு கொழும்பில் பெரும் களேபரங்களுக்கு வழி செய்யப் போகின்றது என்று தான் தோன்றுகின்றது

இந்த விடயங்களைக் கையாளுவதில் தமிழர் தரப்பு கொஞ்சம் பொறுமையாகவும், நிதானமாகவும், பொறுப்பாகவும் செயல்பட வேண்டும். 'எடுத்தோம், கவிழ்த்தோம்' என்று செயலாற்றக்கூடாது என்ற நிலைப்பாடு பல தமிழர் தரப்புகளில் இருந்து பிரதிபலிக்கப்படுகின்றது. அவை பற்றி பின்னர் பார்ப்போம்.

– மின்னல் –

## அமைதியைப் பேண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
முப்படைத் தளபதிகள் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோருடன் இணைந்து நேற்று மாலை அவர் நடத்திய விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் மேலும் கூறியதாவது:–

தற்போதுள்ள அரசமைப்பின் பிரகாரம், பொலிஸாரும் முப்படையினரும் செயற்படுகின்றனர்.

ஜனாதிபதியின் பதவி விலகல் இடம் பெறும் என்று எம்முடனான சந்திப்பில் சபாநாயகர் அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி பதவி விலகிய பின்னர் அடுத்த புதிய ஜனாதிபதியை நாடாளுமன்றம் நியமிக்கும் வரையான காலப் பகுதியில், மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் சபாநாயகருடன் கலந்துரையாடினோம்.

புதிய ஜனாதிபதி நியமிக்கப்படும் வரை நாட்டின் அமைதிக்கு அனைவரும் ஆதரவளிக்க வேண்டும்.

அரச அல்லது தனியார் சொத்துக்களை அழிக்காமல் அமைதியை நிலைநாட்ட அனைவரும் உதவ வேண்டும் – என்றார்.

## அரச தொலைக்காட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
ரூபவாஹினி, நேத்ரா அலைவரிசைகளின் ஒளிபரப்பு இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, சுயாதீன தொலைக்காட்சி சேவையின் ஐ.டி.என். மற்றும் வசந்தம் அலைவரிசைகளின் ஒளிபரப்புகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

## கோட்டாவை உடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
கோட்டாபய ராஜபக்ஷவை உடனடியாகத் இலங்கைக்குத் திருப்பி அனுப்புமாறு அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று அதிகாலை இலங்கையிலிருந்து விமானப்படையின் விமானம் மூலம் மாலைதீவுக்குச் சென்றார்.

அரசின் வேண்டுகோளுக்கு ஜனாதிபதி மாலைதீவு செல்வதற்கு விமானம் வழங்கியதாக விமானப்படை தெரிவித்தது.

ஜனாதிபதியுடன் அவரது மனைவி மற்றும் அவர்களின் இரண்டு பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் நாட்டை விட்டு வெளியேறினர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறியதைப் பிரதமர் அலுவலகமும் நேற்றுக் காலை உறுதிப்படுத்தியது.

## ஆர்ப்பாட்டக்காரர்கள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்துக்கு அருகாமையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தொடர்ந்து கண்ணீர்ப் புகைக் குண்டுகள் வீசப்பட்டன.

இந்தநிலையில், நாடாளுமன்றத்தைப் பாதுகாக்கவும், போராட்டக்காரர்கள் உள்ளே நுழைவதைத் தடுக்கவும் பாதுகாப்புப் படையினருக்கு பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் அறிவுறுத்தப்பட்டது.

இதேவேளை, ஆர்ப்பாட்டக்காரர்கள் மற்றும் பாதுகாப்புப் படையினர் மத்தியில் பேச்சுவார்த்தையை நடைமுறைப்படுத்தி வன்முறைகளைத் தவிர்க்குமாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன வலியுறுத்தினார்.

## அனைவரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
அறிவித்துள்ளார்.

நேற்றிரவு அறிக்கை ஒன்றை வெளியிட்டு பிரதமர் ஊடகப் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளார்.

## தமிழ்த் தலைவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதிகளும் ஒன்று கூடி தீர்க்கமான முடிவெடுக்க வாருங்கள் என மதத்தலைவர்கள் கூட்டாக வலியுறுத்தியுள்ளனர்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பிலேயே சமயத் தலைவர்கள் கூட்டாக இதனை வலியுறுத்தினர்.

செய்தியாளர் சந்திப்பிலேயே நல்லை ஆதீன குரு முதல்வர் சிறில சிறி சோம சுந்தர தளசிக பரமாச்சாரிய சுவாமிகள், யாழ். மறை மாவட்ட ஆயர் யஸ்ரின் ஞானப்பிரகாசம், தெல்லிப்பளை துர்க்காதே தேவஸ்தான தலைவர் ஆர். திரு முருகன், ஹவாய் ஆதீனத்தின் ரிஷி தொண்டுநாத சுவாமிகள் உள்ளிட்டோர் இதனை கூட்டாகக் கோரினர்.

இதன்போது இலங்கையில் இன்றைய சூழலில் மக்களின் அவலதை அவர்கள் வெளிப்படுத்தியமையோடு தென்னிலங்கை அரசியலில் இன,மத வேறுபாடு இன்றி பொது நோக்குடைய வர்வர்கள் ஒன்றுகூடி இலங்கை அரசியல் தர்மத்தின்பால் இல்லை என்பதனை உலகிற்கு எடுத்துக்கூறியுள்ளனர் என்றனர்.

இந்த சூழலில் தமிழ் மக்களிற்காக நாடாளுமன்றம் சென்ற பிரதிநிதிகள், கட்சிகளின் பிரமுகர்கள் அறிவு பூர்வமாக சிந்தித்து, ஒன்றுகூடி, ஒட்டுமொத்தமான நல்ல சந்தர்ப்பத்தை தமிழ் இனத்திற்க இத் தருணத்தில் பயன்படுத்த வேண்டும். இந்த நேரத்திலும் ஒன்றுபட்டு எமது இனத்திற்காக குரல்கொடுக்காது விட்டால் என்றைக்கும் எமக்கு ஓர் ஆறுதல் கிடையாது.

எனவே தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கின்றோம். இதற்கு செவிமடுத்து ஓர் பொது இடத்தில் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் ஒன்றுகூடி மக்களின் நன்மை கருதி ஒழுங்கான சில முடிவுகளை எடுத்து மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும்.

கட்சிகள் பலவாக இருக்கலாம், கொள்கைகள் பலவாக இருக்கலாம். ஆனால் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் தமிழ் மக்களிற்கு இக்கட்டான கால கட்டத்தில் தமிழர்களின் கருத்து ஒருங்கமைக்கப்பட்ட கருத்தாக இருக்க வேண்டும். உண்மையான இனத்தின் கருத்தாக அமைவதற்கு ஒன்றுகூடி ஆராய வேண்டும்.

இன்று தென்னிலங்கையில் ஏற்பட்டது போன்று இனி ஒரு நாள் தமது பிரச்சினைகளை சரியான முறைகளிலே பிரதிநிதிகள் தீர்க்காது விட்டால் இங்கும் ஒரு நாள் மக்கள் திரண்டு எழுவார்கள். அதற்கு முன்பு தமிழ் பிரதிநிதிகள் ஒன்றுபட்டு இன்றைய சூழலிற்கு பொருத்தப்பாடாக பொது அவைக்கு வந்து செயல்பட வேண்டியது அவசியம். மாறாக தற்போதும் அமைதி காத்தால் வரலாறு மன்னிக்காது என்றனர்.

எனவே சந்திப்பிற்கு ஏற்பாடு செய்யவும் தாங்கள் தயாராகவுள்ளனர் என்றனர் அவர்கள்.

## இராஜினாமா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
நேற்று (ஜூலை 13) ஜனாதிபதிப் பதவியிலிருந்து விலகுவதாக ஏற்கனவே சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கோட்டாபய ராஜபக்ஷ உறுதியளித்திருந்தார். எனினும், நேற்று அதிகாலை இலங்கை விமானப்படையின் விமானத்தில் நாட்டை விட்டு மாலைதீவுக்குத் தப்பியோடிய அவர், இன்னமும் பதவி விலகவில்லை.

நான் வெளிநாடு சென்றுள்ள நிலையில் பதில் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவை நியமித்துள்ளேன் என்ற அதி விசேட வர்த்தமானி அறிவித்தலை மாத்திரம் தனது கையொப்பத்துடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்றிரவு வெளியிட்டுள்ளார்.

அதற்கமைய, ஜூலை 13ஆம் திகதி (நேற்று) தொடக்கம் பதில் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க செயற்படுவார் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த வர்த்தமானி அறிவித்தலில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

இலங்கை ஜனநாயக சோசலியக் குடியரசின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய நான், இலங்கைக்கு வெளியே இருப்பதன் காரணமாக ஜனாதிபதிப் பதவிக்குரிய தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் இயலாது எனக் கருதுவதனால், நான் இலங்கைக்கு வெளியே இருக்கும் கால எல்லைக்குள் ஜனாதிபதிப் பதவியின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதற்கும் புரிவதற்குமாக இலங்கை ஜனநாயக சோசலியக் குடியரசு அரசமைப்பின் 37 (01) ஆம் உறுப்புரையின் கீழ், இலங்கை ஜனநாயக சோசலியக் குடியரசின் பிரதம அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவை 2022 ஜூலை மாதம் 13ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு இத்தால் நியமிக்கின்றேன் – என்றுள்ளது.

இதேவேளை, தான் சிங்கப்பூர் சென்றடைந்ததன் பின்னர் அங்கிருந்து தனது பதவி விலகல் கடிதத்தை அனுப்புவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்றுப் பிற்பகல் தன்னிடம் அறிவித்துள்ளார் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் சபாநாயகர் இதனைக் கூறியுள்ளார் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையிலிருந்து நேற்று அதிகாலை மாலைதீவுக்குச் சென்றிருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நேற்று மாலை சிங்கப்பூருக்குப் பயணமாகத் திட்டமிட்டிருந்தார் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. எனினும், கோட்டாபய, சிங்கப்பூர் சென்றடைந்தமை தொடர்பில் உத்தியோகபூர்வ தகவல் எதுவும் நேற்று நள்ளிரவு வரை வெளியாகவில்லை.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# தவறான வழியை நாடாதீர்!

கோட்டாபயவின் எதேச்சாதிகார ஆட்சியை வீட்டுக்கு அனுப்புவது என்ற பெயரில் சுமார் மூன்று மாதங்கள் நடத்தப்பட்ட போராட்டத்தின் முதல் இரண்டரை மாத கால நடவடிக்கைகள், செயற்பாடுகள் போன்றவை எல்லோராலும் மெச்சப்பட்டன.

'கோட்டா கோ கம' போராட்டக்காரர்களுக்கு எதிராக மே 9ஆம் திகதி கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறை உலகளாவிய ரீதியில் கண்டனத்துக்குரியதாகியது. அந்தச் சம்பவத்தை அடுத்து நாடு முழுவதும் மோசமான வன்முறைகள் வெடித்தபோதும் கூட, மக்கள் கணிப்பும் 'கோட்டா கோ கம' போராட்டக்காரர்களுக்கு தார்மீக ரீதியில் ஆதரவு தருவதாகத்தான் இருந்தது.

ஆனால், இன்று நிலைமை தலைகீழாகி விட்டது. அன்று பல்லாயிரக்கணக்கில் 'கோட்டா கோ கம'வுக்கு ஆதரவாக பொதுமக்கள் திரளாத போதிலும் சர்வதேச, தேசிய சகதிகளின் பார்வையில் அந்தப் போராட்டம் தொடர்பில் ஒரு நல்லெண்ணம் இருந்தது. இன்று அப்படியல்ல, மக்கள் கூட்டம், 'கும்பலில் கோவிந்தா' என்பது போல பல பத்தாயிரங்கள் தாண்டி தேவைப்படும் சமயங்களில் எல்லாம் திரளுகின்றது. ஆனால், இது நல்லதற்கல்ல, ஆபத்தானது, விபரீத நிலைமைகளை ஏற்படுத்தக் கூடியது என்ற மனக்கிலேசமான பார்வைதான் உயர்தரப்புகளில் பதிவாகியுள்ளது.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல, இந்தப் போராட்ட விடயத்தில் மெச்சத்தக்க பங்களிப்பை அறிவுஜீவி நிலையில் வழங்கி வந்த இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் இவ்விவகாரத்தை ஒட்டி, முடிவெடுத்து அறிவித்திருக்கும் நிலைப்பாடு நிலைமையைத் தெளிவுபடுத்தப் போதுமானது.

தங்களின் ஆதரவு கிடைக்க வேண்டும் என்றால் ஆர்ப்பாட்டகாரர்கள் ஒழுக்கத்துடன் செயற்பட வேண்டும் என சட்டத்தரணிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கட்டங்களைக் கைப்பற்றி, வன்முறையை ஏற்படுத்தும் வகையில் தொடர்ந்தும் செயற்பட வேண்டாம் என ஆர்ப்பாட்டக்காரர்களிடம் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

அவ்வாறு மோசமாகச் செயற்பட்டால் சட்டத்தரணிகள் சங்கத்தின் ஆதரவு வழங்கப்பட மாட்டாது என சட்டத்தரணிகள் சங்கத்தினர் எச்சரிக்கை வெளியிட்டுள்ளனர்.

மேலும் போராட்டக்காரர்களினால் முற்றுகையிடப்பட்டுள்ள பிரதமர் அலுவலகத்தை உடன் அதிகாரிகளிடம் கையளிக்க வேண்டும் என வெளிப்படையாக அறிவித்து, வழிகாட்டியிருக்கின்றது சட்டத்தரணிகள் சங்கம்.

இந்த எச்சரிக்கைக்காக சட்டத்தரணிகள் சங்கத்தின் மீது, இப்போது கட்டுப்பாடின்றி செயற்படும் ஆர்ப்பாட்டக்காரர்கள் காய்ச்சல் கொள்ளலாம். அதற்காக சட்டத்தரணிகள் சங்கத்தின் அலுவலகக் கட்டடங்களைக் கூட ஆர்ப்பாட்டக்காரர்கள் நாளை ஆக்கிரமித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆனால், அறிவுஜீவிகளாக உயர்மட்டத்தில் சிந்தித்து, மாண்புறும் வகையில் முன்மாதிரியாக நடந்திருக்கின்றது அந்த அமைப்பு.

எனினும், நமது மூன்றாம் தர அரசியல் தலைவர்கள், தங்களது அரசியல் இலக்குகளை அடைவதற்காக இந்த ஆர்ப்பாட்டக்காரர்களை கட்டில்லாத அராஜக அத்துமீறல்களை தொடர்ந்து முன்னெடுக்க வற்புறுத்துகின்றார்கள். நீதியான தீர்வு ஒன்றை எட்டுவதற்கு இந்தப் போக்கு ஆப்படித்து விடும்.

தவறைத் திருத்த தவறான வழிகளை நாடுவதை நமது தலைவர்கள் தவிர்த்துக் கொள்வது முக்கியம்.

# சர்வகட்சி ஆட்சி முறை வேண்டாம் ஜே.வி.பி. ஆதரவாளர் ஆர்ப்பாட்டம்





சர்வகட்சி ஆட்சி முறை வேண்டாம், மக்கள் விரும்பும் ஆட்சி முறையே வேண்டும் எனக் கோரி ஜே.வி.பி கட்சி ஆதரவாளர்கள் ஆர்பபாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஜே.வி.பி கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் என்.சுந்தரேசன் தலைமையில் இந்த போராட்டம் மட்டக்களப்பு காந்தி பூங்காவிற்கு முன்னால் முன்னெடுக்கப்பட்டது.

ஊழலை தவிர நீங்கள் உருப்படியாக செய்தது என்ன? நாட்டை விற்று ஏப்பம் விட்ட கொள்ளையரை விரட்டியடிப்போம், உங்களுக்கு கொண்டாட்டம் மக்களுக்கு திண்டாட்டம், மக்களை ஏமாற்றும் உனக்கு இந்த மண்ணில் இடம் எதற்கு? மற்றும் சர்வகட்சி அரசாங்கம் வேண்டாம் என பல பதாதைகளை ஏந்தியவாறு போராட்டகாரர்கள் கோஷங்கள் எழுப்பியுள்ளனர்.

இதனையடுத்து, சுமார் அரை மணித்தியாலம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதன் பின்னர் அங்கிருந்து மக்கள் கலைந்து சென்றுள்ளனர்.

# பணவீக்க சுட்டெண்ணில் இலங்கை மூன்றாம் இடம்!

உலக பொருளாதார நிலைமை தொடர்பாக ஜோன் ஹோப்கின்ஸ் பல்கலைக்கழகம் மாதாந்தம் வெளியிடும் பணவீக்க அறிக்கையை வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த மாதம் சிம்பாப்வேவுக்கு அடுத்து இருந்த இலங்கை இந்த பணவீக்க அறிக்கைக்கு அமைய கடந்த மாதம் இரண்டாவது இடத்தில் இருந்த இலங்கை இந்த மாதம் மூன்றாவது இடத்தில் உள்ளது என பணவீக்க சுட்டெண்ணில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜூன் மாதம் இலங்கையின் பணவீக்கம் 54 வீதமாக பதிவாகியுள்ளது. கடந்த மாதம் மூன்றாவது இடத்தில் இருந்த துருக்கி இந்த மாதம் இரண்டாவது இடத்திற்கு சென்றுள்ளது.

சிம்பாப்வே தொடர்ந்தும் பணவீக்க சுட்டெண்ணில் முதலாவது இடத்தில் இருந்து வருகிறது. அந்த நாட்டின் பணவீக்கம் 191.60 வீதமாக பதிவாகியுள்ளது.

பாகிஸ்தானின் பணவீக்கம் 21 வீதமாக பதிவாகியுள்ளதுடன் அந்த நாடு பணவீக்க சுட்டெண்ணில் 12 ஆவது இடத்தில் உள்ளது.

ஜோன் ஹோப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியரான ஸ்டீவ் ஹென்க்கின் பணவீக்க சுட்டெண் உலகில் பிரதானமான பணவீக்க ஆய்வு அளவுகோலாக கருதப்படுகிறது.

# சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் இலங்கைச் சிறுமியின் செயற்பாடு!



இலங்கையின் சிறுமி நாட்டின் சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்.

அத்துடன் இந்த சிறுமி தோல்வியடைந்த எமது அரசியல்வாதிகள் அனைவருக்கும் வலுவான செய்திகளை வழங்கி இருக்கிறார் எனக் கொள்கை கற்கைகளுக்கான தெற்காசிய கல்வி நிறுவனம் தனது டுவிட்டரில் தெரிவித்துள்ளது.

டுவிட்டரில் சிறுமி ஒருவர் சுற்றுலாப் பயணிகளிடம் உரையாடி, சுற்றுலாத் துறையை ஊக்குவிக்கும் கருத்துக்களை வெளியிடுகிறார்.

சிறுமி ஒருவர் இலங்கை வந்துள்ள வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளில் ஆங்கிலத்தில் உரையாடி, இலங்கைக்கு அவர்களின் நண்பர்களை அழைத்து வருமாறும் அப்போது இலங்கைக்கு டொலர்கள் கிடைக்கும் எனவும் கூறுகிறார்.

அரசியல்வாதிகளால் எமது தாய் நாடான இலங்கை மிகப் பெரிய பிரச்சினையில் சிக்கியுள்ளது. அவர்கள் அரசியல்வாதிகள் அல்லர். நீங்கள் உங்களது நண்பர்களை எமது நாட்டுக்கு வருமாறு அழையுங்கள்.

நாட்டில் எல்லா இடங்களிலும் பல அருமையான இடங்கள் இருக்கின்றன. எங்களிடம் டொலர் இல்லை. நீங்கள் வந்து எமக்கு டொலர்களைத் தந்து உதவுங்கள்.

நீங்கள் எங்கள் நாட்டுக்கு வந்தால், எமக்கு டொலர்கள் கிடைக்கும். இந்த துண்டுப் பிரசுரத்தை படியுங்கள். எமது அண்ணன்மார், அக்காமார் எமக்கு உதவுவார்கள். அரசியல்வாதிகள் வந்து உதவ மாட்டார்கள். நீங்கள் எங்களுக்கு உதவுங்கள் என அந்த சிறுமி தெரிவிக்கின்றார்.

# உலக நாடுகளும் சர்வதேச நிதியமைப்புகளும் இலங்கைக்கு நிதி வழங்குவதற்குத் தயக்கம்!

## பழைய கடன்கள் காரணம் என்கிறார் அர்ஜூன மகேந்திரன்

முன்னைய கடன்கள் பெருமளவிற்கு குவிந்துள்ளமையால் உலகநாடுகளும் சர்வதேச நிதியமைப்புகளும் இலங்கைக்கு நிதிவழங்குவதற்குத் தயங்குகின்றன. இந்தியா கூடத் தயங்குகின்றது என மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

ச.என்.என். பிலிப்பைன்ஸிற்கு வழங்கிய பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடைவதற்கான காரணங்கள் தொடர்பான கேள்விக்கு, தற்போதைய அரசாங்கம் அறிமுகப்படுத்திய வரிச்சலுகைகள் பணவீக்க அழுத்தத்தை உருவாக்கின. அரசாங்கத்தின் செலவீனங்கள் அனைத்தும் அச்சடிக்கப்பட்ட பணத்தை அடிப்படையாக கொண்டிருந்தமையே இதற்குக் காரணம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உரங்கள் இறக்குமதி தொடர்பில் விவசாய கொள்கைகளில் மாற்றம் இடம்பெற்றது. இரசாயன உரங்களில் இருந்து மாறியது தேயிலை மற்றும் ஏனைய பொருள்களை ஏற்றுமதி செய்யும் தோட்டத்தொழில் துறையை பாதித்தது என தெரிவித்துள்ள அர்ஜுன மகேந்திரன், கொவிட் தாக்கம் தொடங்கியவேளை இலங்கையின் பொருளாதாரம் ஏற்கனவே வீழ்ச்சி நிலையில் காணப்பட்டது .இதன் காரணமாகவே இலங்கை ஏனைய நாடுகளை விட அதிகமாகப் பாதிக்கப்பட்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்க வரவு – செலவுத் திட்டம் மற்றும் பணம் அச்சிடுதல் ஆகியன முழுமையாகக் கட்டுப்பாட்டை மீறுவதை தவிர்ப்பதற்காக வரிவிதிப்பு விகிதங்கள் முன்னர் காணப்பட்ட அளவிற்கு அதிகரிக்கப்படவேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விவசாய நடைமுறைகளை முன்னைய நிலைக்கு மாற்றவேண்டும். பாரிய மாற்றங்களை மேற்கொள்வது என்றால் விவசாயிகளுக்கு அதிகளவு கால அவகாசத்தை வழங்கவேண்டும் எனவும் அர்ஜுன மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

புதிய நிதிகளைப் பெற்றுக்கொள்வதன் மூலம் அந்நியசெலாவணி இல்லாத பிரச்சினைக்குத் தீர்வை காண வேண்டும். கடந்தகாலத்தில் பெருமளவு கடன்களைப் பெற்றுள்ளதால் கடன்கள் குவிந்துள்ளதால் இலங்கை அரசாங்கம் நிதி வழங்குநர்கள் தனக்கு நிதி வழங்கச் செய்வதில் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. இந்தியா கூட புதிய நிதியை வழங்கத் தயங்குகின்றது



என மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மீண்டும் வந்துவிட்டார் எனத் தகவல் கிடைத்தது, அவர் அலுவலகத்தில் இருக்கின்றார். ஆகவே அரசாங்கம் இயங்குகின்றது. பொருளாதாரம் பொருளாதாரக் கொள்கைகள் தொடர்பில் முக்கிய பேச்சுகள் இடம்பெறுகின்றன என தெரிவித்துள்ள முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் இந்த பொருளாதார நெருக்கடி பட்டினியையும் இலங்கை மக்களுக்குத் தேவையற்ற துயரத்தையும் ஏற்படுத்துவதற்கு முன்னர் சரியான பொருளாதார கொள்கையை உருவாக்கி நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

## கோட்டாபய, பஸில் நாட்டைவிட்டு வெளியேற இந்தியா உதவவில்லை!

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு இந்தியா உதவவில்லை என இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

மேலும் இவர்கள் நாட்டை விட்டு வெளியேற இந்தியா உதவியது என வெளியாகிய செய்திகள் ஆதாரமற்றவை எனக் கூறி இந்திய உயர்ஸ்தானிகராலயம் திட்டவட்டமாக மறுத்துள்ளது.

ஜனநாயக வழிமுறைகள் மற்றும் அரசமைப்புக்கட்டமைப்பின்மூலம் இலங்கை மக்களுக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவளிக்கும் என இந்தியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

பாரிய ஆர்ப்பாட்டங்களுக்கு மத்தியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இராணுவ ஜெட் விமானத்தில் மாலை தீவுக்கு நேற்று அதிகாலை சென்றுள்ளார்.

இதேவேளை அமெரிக்காவிற்கு செல்லும் முயற்சியாக பஸில் ராஜபக்ஷவும் நேற்று நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார் என பி.பி.சி. செய்தி வெளியிட்டுள்ளது.

## அமெரிக்கத் தூதரக சேவைகள் இரண்டு நாள்களுக்கு இரத்து!

இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரகம் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, தமது சேவைகளை அடுத்த இரண்டு நாள்களுக்கு ரத்துச் செய்துள்ளது.

மிகுந்த எச்சரிக்கையுடன், தூதரகம் நேற்று பிற்பகல் சேவைகளையும் (அமெரிக்க குடிமக்கள் சேவைகள் மற்றும் என்.ஐ.வி. பாஸ்பேக்) மற்றும் இன்றும் அனைத்து தூதரக சேவைகளையும் ரத்து செய்வதாக தூதரகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஏற்படும் எந்தவொரு சிரமத்திற்கும் தாம் மன்னிப்பு கேட்டுக்கொள்வதாகவும், மேலும் ரத்து செய்யப்பட்ட அனைத்து சந்திப்புகளையும் மீண்டும் திட்டமிடவுள்ளதாகவும் அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது.

நாட்டில் கடந்த சில தினங்களாக ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையின் காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆறு நாள்களாக நாட்டில் நடத்தப்பட்டு வரும் போராட்டங்கள் காரணமாக நாட்டில் அசாதாரண சூழல் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை பதவி விலகக் கோரி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள நிலையிலேயே இந்த சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

## முக்கிய தகவல்களை வெளியிட்ட ஜனகவை பதவி விலக்க முயற்சிக்கும் ஆளும் தரப்பு?

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவை அந்தப் பதவியில் இருந்து நீக்குவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதுதொடர்பிலான யோசனை ஒன்று விரைவில் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவை பதவி நீக்கம் செய்யுமாறு ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் ஆளும் கட்சி உறுப்பினர்கள் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்தநிலையில் 113 பெரும்பான்மை உறுப்பினர்களின் கையொப்பத்துடன் கோரிக்கைக் கடிதம் ஒன்றை நாடாளுமன்றத்தில் முன்வைக்குமாறு அவர்களிடம் வலியுறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே மேற்படி கோரிக்கைக் கடிதம் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சுயாதீன ஆணைக்குழுவின் தலைவர் பதவியை வகிக்கும் ஒருவரை பதவி நீக்கம் செய்வதற்கான அதிகாரம் அரசமைப்பு பேரவைக்கே உள்ளது.

ஒரு லீற்றர் எரிபொருளை 250 ரூபாவிற்கு வழங்க முடியும் என பொதுப் பயன்பாட்டுஆணைக்குழுவின்தலைவர் ஜனக ரத்நாயக்க கடந்த சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

இதற்கு ஆளும் தரப்பிற்குள் இருந்து கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 24 பேர் வைத்தியசாலையில்



கொழும்பிலுள்ள பிரதமர் அலுவலகத்தை முற்றுகையிட்டு நேற்று இடம்பெற்ற வரும் போராட்டத்தில் 24 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த அனைவரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## ரணில் என்ற தனிமனிதரின் பதவிப் பேராசைக்காக நாட்டையும், மக்களையும் பலிகொடுக்கவேண்டாம்!



அநுர குமார ஆலோசனை

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க என்கிற தனிமனிதரின் பதவிப் பேராசைக்காக நாட்டையும், நாட்டு மக்களையும் பலிகொடுக்க வேண்டாம் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று விசேட காணொலி ஒன்றை வெளியிட்டுள்ள அவர், இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

போராட்டக்காரர்களை ஒடுக்குவதற்கு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பயன்படுத்த அரசாங்கம் முயல்வதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

நாடு தீர்மானமிக்க இடத்துக்கு வந்துள்ளதால் அரசியல்வாதிகளும், பொதுமக்களும் புத்திசாலித்தனமாக நடந்துகொள்ளவில்லை என்றால் நாட்டில் மோசமான நிலையொன்று ஏற்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அடக்குமுறைகளை மேற்கொள்ளவும் ஜனநாயக ரீதியற்றவகையில் செயற்படுவதற்கும் ரணில் தனக்குக் கிடைத்திருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி முயற்சிகளை மேற்கொள்கிறார் எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதன்படியே மேல்மாகாணத்தில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது எனவும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தயவு செய்து மக்களின் குரலுக்கும், மக்களின் அபிலாஷைகள், நோக்கங்களுக்கு செவிசாய்க்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அவசரக்காலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதுவொரு அடக்குமுறையான சட்டம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்துக்கு எவ்வாறான அடக்குமுறை தேவைகள் இருந்தாலும் மக்களை அடக்குமுறைக்கு உட்படுத்தும் எந்தவொரு உத்தரவுகளுக்கும் இராணுவம், விமானப்படை, கடற்படை என முப்படையினரும் செவிசாய்க்கக்கூடாது எனவும் அவர் கோரியுள்ளார்.

மக்களின் பக்கம் முப்படையினர் நிற்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கண்ணீர்புகை, நீர்த்தாரைப் பிரயோகங்கள் உள்ளிட்ட தாக்குதலை மக்களுக்கு எதிராக மேற்கொள்ள வேண்டாம். அதுபோல உங்களது ஆயுதங்களையும் மக்கள் பக்கம் திருப்ப வேண்டாம் எனவும் அவர் கோரியுள்ளார்.

# ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவி விலகுவது கட்டாயம்

## மத்திய வங்கியின் நிறைவேற்று அலுவலர்கள் சங்கம் தெரிவிப்பு

இலங்கையின் பொருளாதாரத்தை சீர்குலைத்தமைக்காக நேரடியாகப் பொறுப்புக்கூறவேண்டிய நிலையிலுள்ள ஆட்சியாளர்களுக்கு எதிராகக் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போராட்டத்துக்கு முழுமையாக ஆதரவு வழங்குவதாக அறிவித்திருக்கும் மத்திய வங்கியின் நிறைவேற்று அலுவலர்கள் சங்கம், ஏற்கனவே வாக்குறுதியளித்தவாறு மக்கள் ஆணைக்கு இணங்கி ஜனாதிபதியும் பிரதமரும் அவர்களது பதவிகளிலிருந்து விலகவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

நாட்டின் தற்போதைய நிலைவரம் தொடர்பாக, அடுத்தகட்டமாக மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மத்திய வங்கியின் நிறைவேற்று அலுவலர்கள் சங்கம் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு –

இன்றளவிலே நாடு என்ற ரீதியில், குறிப்பாக மத்திய வங்கி அதிகாரிகளினதும் தொழில்சார் நிபுணர்களினதும் ஆலோசனைகளைப் புறக்கணித்து, குறுகிய அரசியல் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் பொருளாதாரத்தைத் தவறாக நிர்வகித்ததன் பாதக விளைவுகளை நாம் இப்போது அனுபவித்துக்கொண்டிருக்கின்றோம். அரசியல் தொலைநோக்கின்மை, பலவீனமான அரசியல் தலைமைத்துவம், அரசியல் உறுதிப்பாடின்மை என்பவற்றின் காரணமாக தற்போது சர்வதேச சமூகத்திடமிருந்து எத்தகைய வடிவத்திலேனும் உதவி களைப் பெற்றுக்கொள்வதில் இலங்கை சவால்களுக்கு முகங்கொடுத்திருக்கின்றது. இதன்காரணமாக நாட்டின் நிகழ்காலமும் எதிர்காலமும் மிகுந்த அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது.

ஆனால் இத்தகைய நெருக்கடிநிலைக்கு மத்தியிலும் பொருளாதாரத்தை மிகப்பாரதூரமான வீழ்ச்சியிலிருந்து பாதுகாப்பதற்கு மத்திய வங்கி தமது இயலுமை எல்லைக்குள் இருந்து அவசியமான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்துவருகின்றது.

அதுமாத்திரமன்றி முக்கியமான கொள்கை மறுசீரமைப்புக்களையும் மேற்கொண்டுவருகின்றது. எதுஎவ்வாறிருப்பினும் தற்போதைய நெருக்கடியிலிருந்து மத்திய வங்கியால் மாத்திரம் நாட்டை மீட்டெடுக்கமுடியாது என்பதை நினைவுறுத்துகின்றோம்.

மத்திய வங்கியால் நாணயக்கொள்கையின் ஊடாக மாத்திரம் இந்தப் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகாணமுடியாது. மாறாக, அதனை முன்னிறுத்தி இறைக்கொள்கையிலும் உரியவாறான மறுசீரமைப்புக்களை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டிய அவசியம் காணப்படுகின்றது. எனவே பொருளாதாரம் பாரிய வீழ்ச்சிக்கு முகங்கொடுக்கவிருக்கும் தற்போதைய சூழ்நிலையில் அதன் மீட்சிக்கு அவசியமான அனைத்துப் பொருளாதாரக்கொள்கைகளும் நாணய மற்றும் இறைக் கொள்கைகளின் வலுவான ஒருங்கிணைவுடன் அமுல்படுத்தப்படவேண்டும்.

மேலும் இந்தப் பேராபத்திலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான அடிப்படை மூலமாகக் காணப்படும் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கும், இணக்கப்பாடொன்றை எட்டுவதற்கும் நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையை மிகவிரைவில் உறுதிசெய்யவேண்டியது அவசியமாகும்.

ஆகவே, தற்போதைய அரசமைப்பு ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படுமாறும், நாட்டில் அராஜகங்கள் எவையும் இடம்பெறவில்லை என்பதை உறுதிப்படுத்துமாறும் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளிடமும் வேண்டுகோள் விடுக்கின்றோம். தமது கட்சி அல்லது தனிப்பட்ட அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்கு முன்னுரிமை அளிப்பதை விடுத்து, நாட்டில் ஏற்படுத்தப்படவேண்டிய அரசியல் மற்றும் சமூக உறுதிப்பாடு தொடர்பில் உரிய கவனம் செலுத்துமாறும் வலியுறுத்துகின்றோம் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பங்கீட்டு அட்டைக்கே இனி எரிபொருள் யாழ். மாவட்ட செயலர் விசேட அறிவிப்பு!

யாழ்.மாவட்டத்தில் பங்கீட்டு அட்டைகளுக்கே இனி எரிபொருள் வழங்கும் நடைமுறை அமுல்படுத்தப்படும் என்று யாழ்ப்பாண மாவட்ட செயலர் க.மகேசன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

நாட்டில் தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடி நிலை காரணமாக தேவையான எரிபொருளைப் பெறறுக்கொள்வதில்பெரும்சவாலை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

எனினும் அத்தியாவசிய சேவையைத் தடையின்றி வழங்குவதற்கும் பொதுமக்களின் வாழ்வாதார செயற்பாடுகளை முன்னெடுத்து செல்வதற்கும் கிடைக்கப் பெறும் குறைந்தளவிலான எரிபொருளைப் பங்கீட்டு முறையிலேயே வழங்க வேண்டியுள்ளது.

இதுதொடர்பில் எரிபொருள் விநியோக அட்டை முறைமை ஒன்று ஏற்கனவே மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் எரிபொருள் அட்டைக்கே எரிபொருள் விநியோக்கப்பட இருப்பதால் பொதுமக்கள் மற்றும் அத்தியாவசிய சேவையில் ஈடுபடுவோர் அந்த அட்டையை விரைவாகப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

இந்த விடயம் தொடர்பில் பின்வரும் நடைமுறைகளை பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பொதுமக்கள் மற்றும் ஓய்வூதியர்கள் தங்களுக்கான எரிபொருள் விநியோக அட்டையை (வெள்ளை நிறம்) தாங்கள் வதியும் கிராம உத்தியோகத்தரிடமும் அத்தியாவசிய சேவையில் ஈடுபடுவோர் தமது திணைக்களத் தலைவரினுடாகவும் (சுகாதார சேவை – பிங் நிறம், ஏனையோர் – நீல நிறம்) விண்ணப்பித்து பெற்றுக்கொள்ள முடியும்.

வாகனம் ஒன்றுக்கு ஓர் எரிபொருள் விநியோக அட்டை எனும் அடிப்படையில் பதிவுகள் மேற்கொள்ளப்படும்.

வாகன உரிமை தொடர்பில் அது குடும்ப உறுப்பினர்களுக்கிடையே (கணவன்,மனைவி மற்றும் திருமணமாகாத பிள்ளைகள்) காணப்படின் குடும்ப உறுப்பினர் எவரேனும் ஒருவர் எரிபொருள் விநியோக அட்டைக்காக பதிவை மேற்கொள்ள முடியும்.

வாகன உரிமை குடும்ப உறுப்பினர் அல்லாத எவரேனும் பெயரில் காணப்படின் முறையான ஆவணங்களை பிரதேச செயலகத்தில் சமர்ப்பித்து பதிவை மேற்கொள்ள முடியும்.

நபர் ஒருவர் வாகனம் ஒன்றுக்கான எரிபொருள் விநியோக அட்டை பதிவையே தனது பெயரில் மேற்கொள்ள முடியும். எனினும் வணிகம் அல்லது வாழ்வாதார நோக்கத்துக்காக பயன்படுத்தும் வாகனங்களுக்கு இந்த நிபந்தனை பொருந்தாது.

தங்களுக்கான எரிபொருள் நிரப்பு நிலையத்தை தாங்களே தெரிவு செய்து கொள்ளமுடியும். எனினும், ஏதேனும் நிலைமைகளில் எரிபொருள் கிடைக்கப்பெறும் நிலையங்களின் அடிப்படையில் தற்காலிகமாக வேறு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளை பெற்றுக் கொள்வதற்கான அறிவுறுத்தல் உரிய தரப்பினரால் தங்களுக்கு வழங்கப்படும்.

மேற்படி அட்டைகளை பெற்றுக்கொள்வதில் ஏதேனும் இடர்பாடுகள் காணப்படுமாயின் உடனடியாக பிரதேச செயலகங்களை நாடுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

இனிவரும் காலங்களில் எரிபொருள் அட்டைக்கே எரிபொருள் விநியோகம்எனும்பங்கீட்டுமுறைமை இறுக்கமாக நடை முறைப்படுத்தப்பட இருப்பதனால் உடனடியாக எரிபொருள் விநியோக அட்டையை விரைவாகப் பெற்றுக் கொள்ளுமாறு அனைவரும் அறிவுறுத்தப்படுகிறீர்கள். – என்றுள்ளது.

## புதிய ஜனாதிபதியின் முதலாவது கடமையாக ரஞ்சன் ராமநாயக்கவை விடுவிக்கவேண்டும்

### ஹர்ஷன ராஜகருணா வலியுறுத்து

புதிய ஜனாதிபதியின் முதலாவது கடமையாக ரஞ்சன் ராமநாயக்கவை விடுதலை செய்யுமாறு கோரிக்கை விடுக்க இருக்கின்றோம் என ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.

கொழும்பு வெலிகடை சிறைச்சாலையில் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் பார்வையிடச்சென்றனர். அதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்–

ரஞ்சன் ராமநாயக்கவை சிறையில் அடைத்து இன்றுடன் (கடந்த செவ்வாய்) ஒன்றரை வருடங்கள் ஆகின்றன. உண்மையை தெரிவித்தே சிறைக்கு சென்றார்.

அவரை விடுதலை செய்யுமாறு நாங்கள் பல தடவைகள் ஜனாதிபதிக்கு தெரிவித்திருந்தோம். என்றாலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதுதொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஆனால் ராஜபக்ஷ அரசாங்கத்தில் கொலை காரர்களும், போதைப்பொருள் கடத்தல்கார்களும் பொது மன்னிப்பில் விடுதலை பெற்றுச்சென்றுள்ளனர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க கொலை செய்த குற்றத்துக்கோ அல்லது போதைப் பொருள் கடத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டதாலோ சிறைப்படுத்தப்படவில்லை.

அவர் எப்போதும் உண்மையை வெளிப்படையாகத் தெரிவித்து வருபவர். அதனால் தான் அவருக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்கின்றது. எனவே, கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகிய பின்னர் புதிய ஜனாதிபதி ஒருவர் தெரிவுசெய்யப்பட இருக்கிறார்.

இவ்வாறு தெரிவுசெய்யப்படும் புதிய ஜனாதிபதிக்கு முதலாவது கடமையாக ரஞ்சன் ராமநாயக்கவை விடுதலை செய்யும் கோரிக்கையை ஐக்கிய மக்கள் சக்தி விடுக்க இருக்கின்றது. – என்றார்.

## 203 கிலோ கிராம் கேரள கஞ்சா பொதிகளுடன் மன்னார், இலுப்பைக் கடவையில் ஒருவர் கைது



மன்னார் – மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இலுப்பைக் கடவை பகுதியில் சுமார் 203 கிலோ கிராம் கேரள கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

முழங்காவில் கடற்படை முகாம் அதிகாரிகளால் திங்கட்கிழமை மாலைமேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது மேற்படி கேரள கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.


சந்தேகத்துக்கிடமான படகொன்றை சோதனைக்குட்படுத்திய போது அதில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கேரள கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டன எனப் பொலிஸார் கூறினர்.

இதன்போது மேற்படி சம்பவம் தொடர்பில் வெள்ளாங்குளம் பகுதியை சேர்ந்த 45 வயதான ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில், சந்தேகநபரை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு இலுப்பைக்கடவை பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

# ஜனாதிபதி செயலகத்தையும் அலரி மாளிகையையும் ஜனாதிபதி பதவி விலகிய பின் இராணுவத்தினரிடம்!

## ஒப்படைக்கவேண்டும் என்கிறார் ஓமல்பே சோபித தேரர்




ஜனாதிபதி பதவியை இராஜினாமா செய்த பின்னர் ஜனாதிபதி செயலகத்தையும் அலரிமாளிகையையும் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கவேண்டும் என ஓமல்பே சோபித தேரர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் தற்போது ஆக்கிரமித்துள்ள கட்டடங்களை படையினரிடம் ஒப்படைக்கவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். ஜனாதிபதி தனது பதவியை இராஜினாமா செய்வதை காலிமுகத் திடலிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்களுக்கான வெற்றியாகக் கருத வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த புதிய வெற்றி காரணமாக தங்கள் கட்டுப்பாட்டின் உள்ள கட்டடங்களை கையளிக்கவேண்டிய பொறுப்பு ஆர்ப்பாட்டக்காரர்களிற்கு உள்ளது. இது தேசிய பாதுகாப்பு விவகாரம் எனவும் ஓமல்பே தேரர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி பதவி விலகிய பின்னர் அந்தக் கட்டடங்களை படையினரிடம் ஒப்படைக்காவிட்டால் அதனால் தேசிய பாதுகாப்பிற்கு ஆபத்து ஏற்படும். பல அரசியல் சதிமுயற்சிகளுக்கு வழிவகுக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# அறுவடை நெல்லை விற்பனை செய்ய முடியாத நிலைமையில் விவசாயிகள்

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக அறுவடை செய்த நெல்லை விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும் அறுவடைக்கான எரிபொருள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை என பல விவசாயிகள் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் ஒரு லீற்றர் டீசலை 1,200 ரூபாவுக்கும் அதிகமான பணத்தை கொடுத்து கொள்வனவு செய்து அறுவடையை மேற்கொள்ள வேண்டிய நிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

அறுவடை செய்து அந்த நெல்லை விற்பனை செய்வதற்காக தயார் நிலையில் வைத்திருந்த போதிலும் அதற்கான வியாபாரிகள் வெளிமாவட்டத்திலிருந்து எரிபொருள் இன்மை காரணமாக நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக வருவதில்லை.

இந்நிலையில் எரிபொருள் இன்மை காரணமாக மிக குறைந்த விலைக்கே நெல்லைக் கொள்வனவு செய்ய பலர் முயற்சிக்கின்றனர். இதன் காரணமாக விவசாயிகளால் அறுவடை செய்யப்பட்ட நெல்லை தொடர்ச்சியாக உலர விட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.



இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தமக்கான நெல்லை விற்பனை செய்வதற்கான உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கம் நெல்லுக்கான விலையை அறுவடை ஆரம்பக் காலப்பகுதியிலே தீர்மானிக்க வேண்டும் எனவும், விவசாயிகள் வங்கிகளில் கடன் பெற்று இந்தக் கடனை அறுவடை முடிந்தவுடன் மீள வழங்கும் வகையில் கடன் பெற்றனர் எனவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

# 27 ஆயிரத்து 937 பேர் ஜூனில் வெளிநாடு சென்றுள்ளார்கள்!

## வேலைவாய்ப்பு பணியகம் தகவல்

இந்த வருடம் ஜூன் மாதத்தில் 27 ஆயிரத்து 937 பேர் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக சென்றுள்ளனர் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இவர்களில் 18 ஆயிரத்து 83 பேர் தாங்களாகவே வேலை வாய்ப்புகளை தேடிக் கொண்டனர் எனவும், 9 ஆயிரத்து 854 நபர்கள் உரிமம் பெற்ற வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் மூலம் சென்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2022 ஜனவரி மற்றும் ஜூலை முதல் வாரத்துக்கு இடையில், ஒரு லட்சத்து 56 ஆயிரத்து 179 பேர் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக சென்றுள்ளனர் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் குறிப்பிட்டுள்ளது.

இவர்களில் ஒரு லட்சத்து 767 பேர் சொந்த வழிகளிலும் 55, ஆயிரத்து 411 பேர் உரிமம் பெற்ற வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் மூலம் நாட்டை விட்டு வெளியேறினர்.

மேலும் குவைத்துக்கு 39 ஆயிரத்து 216 பேர், கட்டாருக்கு 36 ஆயிரத்து 22 பேர், சவுதி அரேபியாவுக்கு 26 ஆயிரத்து 98 பேர், தென் கொரியாவுக்கு 3 ஆயிரத்து 219 பேர், ஜப்பானுக்கு 2 ஆயிரத்து 576 பேர் வேலைக் காகச் சென்றுள்ளனர்.

# மெய்நிகர் நாணயங்களின் பயன்பாடு குறித்து இலங்கை மத்தியவங்கி அறிக்கை வெளியீடு!

இலங்கையில் மெய்நிகர் நாணயங்களின் பயன்பாடு தொடர்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கி விசேட அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

சர்வதேச மற்றும் உள்நாட்டு சந்தைகளில் பயன்படுத்தப்படும் மெய்நிகர் நாணயம் தொடர்பான சமீபத்திய முன்னேற்றங்கள் மற்றும் மெய்நிகர் நாணயம் தொடர்பான விசாரணைகளை கருத்தில் கொண்டு இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளதாக வங்கி தெரிவித்துள்ளது.

மெய்நிகர் நாணயங்கள் என்பது தனியார் நிறுவனங்களால் வழங்கப்படும் மற்றும் மின்னணு முறையில் வர்த்தகம் செய்யக்கூடிய மதிப்பின் பெரும்பாலும் ஒழுங்குபடுத்தப்படாத டிஜிற்றல் பிரதிநிதித்துவங்கள் ஆகும்.

2018 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் சி.பி.எஸ்.எல். செய்தி வெளியீடுகள் மூலம் பொதுமக்களுக்கு முன்னர் தெரிவித்தபடி, கிரிப்டோகரன்சிகள் உட்பட வி.சிக்களை உள்ளடக்கிய திட்டங்களை இயக்குவதற்கு சி.பி.எஸ்.எல். எந்தவொரு நிறுவனத்துக்கும் உரிமம் அல்லது அங்கீகாரம் வழங்கவில்லை. மேலும் எந்த ஆரம்ப நாணய சலுகைகளையும் அங்கீகரிக்கவில்லை.

சுரங்க நடவடிக்கைகள் அல்லது மெய்நிகர் நாணய பரிமாற்றங்கள். மேலும், வழிமுறைகள் எண். அந்நியச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2021 இன் 03, எண். சி.பி. எஸ்.எல். இன் அந்நியச்செலாவணித்திணைக்களத்தால் வழங்கப்பட்ட 2017 இன் 12, டெபிட் கார்டுகள் மற்றும் கிரெடிட் கார்டுகள் போன்ற மின்னணு நிதி பரிமாற்ற அட்டைகள் மெய்நிகர் நாணய பரிவர்த்தனைகள் தொடர்பான பணம் செலுத்துவதற்குப் பயன்படுத்த அனுமதிக்கப்படவில்லை.

எனவே, வி.சி. கள் கட்டுப்பாடற்ற நிதிக் கருவிகளாகக் கருதப்படுகின்றன மற்றும் இலங்கையில் அவற்றின் பயன்பாடு தொடர்பான ஒழுங்குமுறை மேற்பார்வை அல்லது பாதுகாப்புகள் இல்லை.

எனவே, வி.சிகளில் முதலீடு செய்வதன் மூலம் பயனர்களுக்கு ஏற்படும் குறிப்பிடத்தக்க நிதி, செயல்பாட்டு, சட்ட மற்றும் பாதுகாப்பு தொடர்பான அபாயங்கள் மற்றும் வாடிக்கையாளர் பாதுகாப்பு தொடர்பான கவலைகளுக்கு சாத்தியமான வெளிப்பாடுகள் தொடர்பாகப் பொதுமக்கள் எச்சரிக்கப்படுகிறார்கள்.

இணையம் மற்றும் பிற ஊடகங்கள் மூலம் வழங்கப்படும் பல்வேறு வகையான வி.சி. திட்டங்களுக்கு இரையாக வேண்டாம் என்றும் பொதுமக்கள் எச்சரிக்கப்படுகிறார்கள்.

# ரயில் பயணிகள் தொடர்புக்கு அவசர இலக்கம் அறிமுகம்!




இலங்கைரயில்வேத்திணைக்களம்பயணிகளுடன் இலகுவாக தொடர்பு கொள்வதற்காக அவசர இலக்கமொன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

ரயில் சேவைகள், ரயில் பயண அட்டவணைகள் அல்லது பிற தொடர்புடைய தகவல்கள் பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு திணைக்களத்தைத் தொடர்பு கொள்ள விரும்பும் பயணிகள் எந்த நேரத்திலும் 1971 என்ற எண்ணை அழைப்பதன் மூலம் தொடர்பு கொள்ளலாம்.

இதன் மூலம் பொது மக்கள் மூன்று மொழிகளிலும் (சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம்) திணைக்களத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ரயில் இயக்க அட்டவணைகள், இருக்கை முன்பதிவுகள், ரயில் கட்டணம், ரயில் திணைக்கள பாதுகாப்பு சேவைகளைத் தொடர்பு கொள்ளுதல் மற்றும் ரயில் திணைக்களம் தொடர்பான பிரச்சினைகள் போன்ற தகவல்களை மக்கள் பெறலாம்.

புதிய 24 மணி நேர அவசர எண் இன்று (வியாழக்கிழமை) காலை 7 மணிக்குப் பின்னர் செயல்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கையில் புதிய அரசு அமைக்க ரஷ்யா ஒத்துழைப்பு வழங்க தயார்!

இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகள் அது உள்நாட்டு விவகாரங்களாகும் என ரஷ்ய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் மரியா ஸாகரோவா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள அபிவிருத்திகள் அதன் உள்நாட்டு விவகாரமாகும், மேலும் நாட்டின் அரசியல் செயல்முறை, அதன் அரசமைப்பு மற்றும் பயனுள்ள சட்டங்களுக்கு இணங்க மேலும் வளர்ச்சியடையும் என நட்பு நாடு என்ற ரீதியில் நாங்கள் நம்புகிறோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் புதிய அரசாங்கம் அமைக்கப்படும் என எதிர்பார்க்கிறோம். அதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்குத் தயாராக உள்ளோம்.

நாடு வழமை நிலைமை திரும்பும் என்றும், இலங்கையின் புதிய அதிகாரிகள் தேசிய பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைப் போக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பார்கள் என்றும் நாங்கள் நம்புகிறோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ரணிலை பிரதமர் பதவியிலிருந்து கோட்டா உடன் நீக்கவேண்டும்!

## அநுர வலியுறுத்து



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மக்களின் கோரிக்கைக்கு மாறாக ஜனாதிபதியாக வருவதற்கு சாமர்த்தியமாக முயற்சிக்கிறார் எனக் குற்றம் சுமத்தியுள்ள மக்கள் விடுதலை முன்னணி, நாட்டை மேலும் அமைதியின்மைக்கு ஆளாக்காமல், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் முன்னர், ரணில் தமது பதவியைத் துறக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க விசேட அறிக்கையொன்றை வெளியிட்டு இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

மதத் தலைவர்கள் உட்பட அனைத்து தரப்பு மக்களும் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகிய இருவரையும் பதவிகளில் இருந்து விலகுமாறு கோருவதுடன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக வருவதற்கு முயற்சிக்கின்றமை நாட்டில் அமைதியின்மையை மோசமாக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் முன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவியிலிருந்து விலக வேண்டும் என்று கூறிய அவர், அவ்வாறு செய்யவில்லை என்றால், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவரை பிரதமர் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுள்ளார்.

நாட்டில் மேலும் அமைதியின்மையை ஏற்படுத்தாமல் பதவி விலகுமாறு ஜனாதிபதியையும் பிரதமரையும் வலியுறுத்துகிறோம். கடந்த சில மாதங்களாக எமக்குப் போதுமான குழப்பங்களும் அமைதியின்மையும் ஏற்பட்டிருந்தன.

நாட்டில் தற்போது சகல துறைகளும் முடங்கியுள்ளன. அதற்கு ஜனாதிபதி மற்றும் பிரதமரின் பொறுப்பு உள்ளது. எனவே, மக்களின் கோரிக்கைக்கு பிரதமர் செவிசாய்த்து இனி எந்த நெருக்கடியையும் தவிர்க்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

மேலும், சில நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கி பெரும்பான்மையுடன் நாடாளுமன்றத்தில் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட பிரதமர் விக்கிரமசிங்க சதி செய்கிறார் எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

## அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதில் சிக்கல்!

அரசாங்க ஊழியர்களுக்கு இந்த மாத சம்பளம் வழங்குவதில் சிக்கல் நிலை உருவாகியுள்ளதாக சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

சம்பளம் வழங்குவதற்கு பணம் அச்சிடப்பட வேண்டியிருப்பதாகவும், அதற்கு அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் தற்பொழுது நிலவி வரும் சூழ்நிலையினால் அமைச்சரவைக் கூட்டமொன்றை நடத்தக்கூடிய சந்தர்ப்பம் கிடைக்குமா என்பது சந்தேகமே என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பிரச்சினைக்கு உடன் தீர்வு வழங்கப்பட வேண்டுமாயின் பதில் ஜனாதிபதி ஒருவரை நியமிக்க வேண்டுமென தெரிவித்துள்ளார்.

சில நாள்களுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பதில் ஜனாதிபதியாக நியமித்து, அமைச்சரவைக் கூட்டமொன்றை நடத்த வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

அவசர அமைச்சரவைக் கூட்டமொன்றை நடத்தாவிட்டால் இந்த மாதம் 25 ஆம் திகதி அரசாங்க ஊழியர்களுக்கான சம்பளங்களை வழங்க முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவையின் தீர்மானத்தை நிதிச் சபைக்கு அறிவித்தால் மட்டுமே பணம் அச்சிடப்பட முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வாழ்க்கைச் செலவு படி, மேலதிக நேரக் கொடுப்பனவு தவிர்ந்த சம்பளத்தை மட்டும் வழங்குவதற்கு 290 கோடி ரூபா பணம் தேவைப்படுவதாக பெயர் குறிப்பிட விரும்பாத சிரேஷ்ட அமைச்சர் சிங்கள பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

## அமைதியான அதிகார மாற்றங்கள் அவசியம் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்து

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அமைதியான அதிகாரமாற்றத்துக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சட்டத்தின் ஆட்சி மற்றும் அரசமைப்பிற்கு உட்பட்டு சுமுகமான மற்றும் அமைதியான அதிகார மாற்றத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது.

கடந்த சில மாதங்களாக இலங்கை மக்கள் உண்மையான மாற்றத்துக்காக மேற்கொண்ட தியாகங்கள் கணக்கிடமுடியாதவை என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கை மக்களின் உயிர்களையும் வாழ்வாதாரத்தையும் பாதுகாப்பதற்கு அமைதியான மாற்றத்தையும் இலங்கையில் சட்டத்தின் ஆட்சி அரசமைப்பிற்கான தொடரும் மதிப்பையும் உறுதிப்படுத்தவேண்டியது அதேபோன்று முக்கியமானது என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் உட்பட பல்வேறு தரப்பினரின் அறிக்கைகள் சட்டத்தின் ஆட்சியை குறைமதிப்பீட்டிற்கு உட்படுத்துவது போலக் காணப்படுவது தொடர்பாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

## விமான ரிக்கெட்டின் விலை எகிறும் சூழ்நிலை உள்ளது!

### சர்வதேச விமானப் போக்குவரத்து சங்கம் எச்சரிக்கை

சர்வதேச அளவில் எரிபொருள் விலை உயர்வால், விமான ரிக்கெட்டின் விலை கணிசமாக உயரும் என சர்வதேச விமானப் போக்குவரத்து சங்கம் எச்சரித்துள்ளது.

சங்கத்தின் தலைமை இயக்குநர் வில்லி வால்ஷ், உக்ரைன் ரஷ்யா நெருக்கடி இன்னும் முடிவுக்கு வராததும் இதற்கு ஒரு காரணம் எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

சில மாதங்களில் வடக்கு அரைக்கோணத்தில் குளிர்காலம் வருவதால், விமான ரிக்கெட் விலை கணிசமாக அதிகரிக்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே உலகின் பல நாடுகளிலுள்ள விமான நிலையங்களில் விமானங்கள் இரத்துச் செய்யப்படுவது அதிகரிக்கும் என்று வில்லி வால்ஷ் கணித்துள்ளார்.

போதிய எரிபொருளைக் கொள்வனவு செய்ய முடியாமையே இதற்கான காரணம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## மக்களின் உணர்வு எழுச்சிப் போராட்டத்தின் போது ஊடகவியலாளரை தாக்கியமை கண்டிக்கத்தக்கது!

### ஈரோஸ் ஜனநாயக முன்னணிப் பொதுச் செயலாளர் காட்டம்



(க.கிருபாகரன்)

ஜூலை 9 ஆம் திகதி கொழும்பு மாநகரில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அலுவலகத்துக்கு முன்னால் வைத்து பாதுகாப்புத் தரப்பினரால் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமை ஊடக சுதந்திரத்தை அடக்கி ஒடுக்கும் நடவடிக்கையாகுமென ஈரோஸ் ஜனநாயக முன்னணி பொதுச் செயலாளர் நாயகம் இரா.ஜீவன் இராஜேந்திரம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு –

இந்த நாட்டில் ஜனநாயகம் கேள்விக்குட்படுத்தப்பட்ட போதெல்லாம் ஜனநாயகத்தை பாதுகாக்கும் தூண்களாக ஊடகவியலாளர்களே செயற்பட்டிருக்கின்றார்கள். குறிப்பாக 1971, 1989 கிளர்ச்சியில் சிங்கள இளைஞர்கள் மீது மேற்கொண்ட ஜனநாயக விரோத படுகொலையின் போதும், 1980 களில் தமிழர் தரப்பினரின் போராட்ட காலங்களின் போது மக்கள் மீதான இராணுவ அடக்குமுறைகளை வெளி உலகுக்குக் கொண்டு வருவதில் ஊடகத் துறையினரின் பங்கு மகத்தானது.

இன்றைய போராட்ட வெற்றிக்கு பின்னைய காலங்களில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதில் ஊடகங்கள் சமூக பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டுமானால், அரசமைப்பில் அடிப்படை உரிமைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது போல் அவர்களின் சுதந்திரமான செயற்பாடுகளில் தலையிடாதிருக்க வேண்டும்.

இதேவேளை, கடந்த கால அரசாங்கங்களால் ஊடக நிறுவனங்கள் மீதும், ஊடகவியலாளர்கள் மீதும் பல்வேறு வகையிலான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன் காரணமாகப் பல ஊடகவியலாளர்கள் உயிரிழந்ததோடு, பலர் நாட்டை விட்டு வெளியேறிச் சென்றனர்.

இந்நிலையில் ஜூலை 9 ஆம் நாளில் பொதுமக்கள் முன்னிலையில் உண்மை நிகழ்வுகளை நாடறிய, உலகறியச் செய்து கொண்டிருந்த ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமை எமது நாட்டில் ஊடக சுதந்திரம் எவ்வாறு உள்ளது என்பதைக் கோடிட்டுக் காட்டியது. இதன்போது குறித்த ஊடகவியலாளர்கள் தம்மை அடையாளப்படுத்தும் ஊடக அடையாள அட்டை மற்றும் ஊடக இலட்சினை பொறித்த ரீ சேட்டை அணிந்திருந்தனர்.

இவ்வாறான நிலையில் தற்போதைய காலகட்டத்தில் பதவியேற்கவிருக்கும் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அவர் தலைமையிலான அரசாங்கம் ஊடக நிறுவனங்களையும், ஊடகவியலாளர்களையும் தமது கடமைகளைத் தங்கு தடையின்றி மேற்கொள்ள உரிய வழிவகைகளைச் செய்து கொடுக்க வேண்டும். அத்தோடு ஊடகவியாளர்களைத் தாக்கிய பாதுகாப்புத் தரப்பினர் மீது உரிய ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அந்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!




- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம்-62

### பேரினவாதத்தின் ஆழங்கள்

பண்டாரநாயக்கா, ஸ்ரீமாவோ, ஜே.ஆர்., பிரேமதாஸா, மஹிந்த, மைத்திரி, ரணில், கோட்டாபய இவர்கள் எல்லோருமே பேரினவாதப் பெரும்பான்மையின் முகங்களே ஒழிய, பேரினவாதத்தைப் பின் நின்று இயக்குபவர்கள் இவர்கள் அல்லர். இதனைத் தமிழ் மக்களும் நாட்டு மக்கள் யாபேரும் புரிந்து கொள்ள வேண்டும் என விளக்கினார் கந்தசாமி.

சிங்களப் பெரும்பான்மை இன்று காலம் காலமாக முன்னேறி, பல கட்ட




மைப்புகளைஜ் கொண்டுள்ளது.

ஆகவே ஒரு சிலரின் கை குலுக்கல்களினாலும், தரப்படும் வாக்குறுதிகளினாலும், மற்றைய கட்டமைப்புகளில் காணப்படுபவர்கள் ஏற்படக்கூடிய இணக்கத்தை செயற்படுத்த விட்டு விடப் போவதில்லை.

அந்தக் கட்டமைப்புகளின் அத்திவாரம் பௌத்த மகா சங்கங்கள். அவர்கள் மகா வம்சத்தை பின்பற்றுவார்கள். தமிழ் மக்களுக்கு எதிரான சந்தேகங்களை அவர்களால் நீக்கி விடுவது என்பது முடியாத காரியம். அவர்களோடு இணைந்ததுதான் இனவெறுப்பில் – ஒதுக்கலில் – ஆதாயம் தேடும் அரசியல்வாதிகள், பெரும்ப வியாபார வர்த்தகர்கள், அற்ப வசதிகளுக்காகவும் சலுகைகளுக்காகவும் இவர்களுக்கு ஆதரவு தரும் மக்கள், அவற்றை நடைமுறைப்படுத்த நியமிக்கப்படும் அதிகாரிகள், அவர்களை தேர்ந்தெடுக்கும் சிங்கள புத்திஜீவிகள், இவர்களுக்கு மேலாக ராஜபக்ஷக்கள் அமைத்திருக்கும் இராணுவக் கட்டமைப்புகள் என்ற தரப்புகள் உள்ளன.

உலகிலேயே விகிதாசாரப்படி ஆயிரம் குடிமக்களுக்கு இருக்கும் இராணுவம்



ஸ்ரீலங்காவில்தான் எண்ணிக்கை அளவில் முதன்மையானது. அவர்களுக்காகும் செலவும் நாட்டின் வருமானத்தின் பெரும் பகுதியை ஏப்பமிடுகின்றது. பிரிட்டிஷ் இராணுவத்திற்குமான செலவிலும் இவை கூடியவை. ஸ்ரீலங்காவில் ஆயிரம் பேருக்கு 10.92 இராணுவ சிப்பாய்கள். பாகிஸ்தானில் 5.91, சீனாவில் 2.88, இந்தியாவில் 2.28, அமெரிக்காவில் 5 .22, கனடாவில் 2.2 வீதம்.

இலங்கையின் இராணுவத்தினர் 450 க்கும் மேற்பட்ட முகாம்களில் நிலை கொள்ளப்பட்டுள்ளார்கள். அவர்களில் 90 வீதம் தமிழ் பகுதிகளில். இவை எல்லாமே ஆரம்பத்தில் விடுதலைப் புலிகள் ஒழிக்கப்பட வேண்டும் என்பதற்காக. இப்போது – வெற்றிக்குப் பின் – முற்றும் முழுதாக நாட்டை ஒற்றை ஆட்சிக்குள் கொண்டு வந்து தமிழ் மக்களின் கோரிக்கைகள் மேலெழுந்து விடாமல் இருப்பதற்காகவே.

ஆதலால் எப்படியான தீர்வும் – அது இனப் பிரச்சினைக்கானதானால் – இரா



ணுவத்தின் அனுசரணையும் ஒத்துழைப்புமின்றி நடைமுறையைப் போவதில்லை. இந்த இராணுவத்தின் விசுவாசம் ராஜபக்ஷக்களுக்கு உண்டு . இன்று தேர்வு செய்த மக்களாலேயே துரத்தப்பட்டு, அவர்களுக்கு முகம் கொடுக்க முடியாது, கோட்டாபய வெளியேற முயற்சி எடுத்தபோது அது பொது சேவையாளர்களால் முறியடிக்கப்பட, எல்லா விதத்திலும் படைத்தரப்பே அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்து, காப்பாற்றி, ஏற்பாடுகள் செய்து, மாலைதீவுக்குக் கொண்டு போய்ச் சேர்த்தது என்பதிலிருந்து விடயங்களை நாம் அறிந்து கொள்ளலாம்.

முன்னைய காலங்கள் போல இராணுவ அதிகாரிகள் அரசியல் சார்பற்றவர்களாக – பொது மக்களின் பாதுகாப்புக்காக, உத்தரவுகளை மதிக்க வேண்டும் என்ற கடப்பாடு இல்லாதவர்களாக இப்போது நடக்கிறார்கள். அரசியல்வாதிகளின் எடுபிடிகளாகவே இயங்குகிறார்கள். அவர்கள் மதியாத அரசமைப்புச் சட்டம் ஏதும் அமலாக்கப்படப் போவதில்லை . தமிழ்மக்களதுதீர்வுக்கானசரத்துக்களை பொருத்தமட்டில் அவற்றையும் இராணுவத்தினரே தீர்மானிப்பார்கள்.

இந்தச் சூழலில் இன்றைய அரசியல்வாதிகளின் பதவிப் போராட்டங்களில் வரக்கூடிய அரசினால் ஒரு புதிய அரச



மைப்புச் சட்டம் உருவாகுமா என்பது சம்பந்தனுக்கு அவரது அனுபவத்தில் தெரியாததா என்பது நண்பர் கந்தசாமியின் விசனம் வெளியிட்டனர்.

### குடியரசு சட்டங்களின் வரலாறு


1972ஆம் ஆண்டு அரசமைப்புச் சட்டம் ஏன் சிறிமாவோ அரசினால் ஏற்படுத்தப்பட்டது? அந்த வருடங்களில் நாடாளுமன்றத்தில் அங்கத்தினராக இருந்தவர்களுக்கும் இன்று இருப்போருக்கும் தகைமையில் உள்ள வேறுபாடு என்ன?

இன்று இருப்பவர்களில் அநேகம் பேர் பொருள்கள் போன்றவர்கள். வாங்க, விற்கப்படக் கூடியவர்கள்.

தமிழ்ப் பரப்பிலிருந்து செல்வநாயகம, அமிர்தலிங்கம், நவரத்தினம், சிவசிதம்பரம், துரைரத்தினம், கதிரவேற்பிள்ளை, தர்மலிங்கம் என அடுக்கிக் கொண்டு போய் பின் தமிழ் மக்களுக்கு ஆதரவாக இருந்த சிங்களப் பிரதிகள் பற்றியும் கூறினார்.

கொல்வின் ஆர்.டி. சில்வா, பீட்டர் கெனமன் என்.எம்.பெரேரா, மைத்திரிபால சேனாயக்க, பிரின்ஸ் ராஜசூரியர் எனப் பலர். கொல்வினும், அவர் இணைந்திருந்த லங்கா சமசமாக கட்சியும், 'நாட்டில் இரு மொழிகள் என்றால் ஒரு நாடு; ஒரு மொழி என்றால் இரண்டு நாடுகள்' என்ற கொள்கையைக் கொண்டவர்கள். ஆனால் சமஷ்டி அமைப்பை இலங்கைக்கு ஏற்றதாக அவர்கள் பார்க்கவில்லை.

அவர்களில் என்.எம். பெரேரா லண்டனில் பொருளாதார முதுகலைப் பள்ளியில், சமஷ்டி முறையில் இயங்கி வந்த பல நாடுகளின் அரசமைப்புச் சட்டங்களை ஆராய்ந்து, அதில் முதுகலை பட்டம் பெற்றவர். எனும் அவரின் கம்யூனிச கட்சியும் நீதியான நிர்வாகத்தை ஆதரித்தது. சிறிமாவோ, என். க்யூ. டயஸ்,



பீலிக்ஸ் டயர்ஸ் பண்டாரநாயக்கா போன்றோர் கோடீஸ்வரனது வழக்கில் நேர்ந்த நிலைமையில் மாதிரி, சோல்பரி அரசமைப்புச் சட்டத்தின் 29ஆம் இடத்தில் திரும்பவும் சிறுபான்மையின மக்களால் பாவிக்கப்படக்கூடாது என்று கருதி, அதனைப் புதிய அரசமைப்பில் நீக்கிக் கொள்ள உறுதியாக இருந்தார்கள்.

ஆயினும் தமிழ் மக்களுக்கு அனுசரணையாக இருந்தவர்களின் ஆதரவில் பொருத்தமான கட்டமைப்புகளை தேடிக்கொள்ளாமல், தமிழர் தரப்பு சமஷ்டியை முன்வைக்க, அது நாடாளுமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது. பேரினவாதிகள் விரும்பியபடி அரசமைப்பு உருவாகியது. அதில் தமிழர் சம்பந்தப்பட்ட – அதுவரை ஆக்கப்பட்ட – எல்லாச் சட்டங்களை மாத்திரம் கொல்வின் ஆர். டி. சில்வா குடியரசின் அங்கமாக இணைத்து விட்டார்.

ஆனால் 77ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதரவுடன் வந்த ஜே.ஆர்.ஆக்கிய அரசமைப்பில் அவையெல்லாம் அகற்றப்பட்டன.

அவற்றைப் பற்றிய விடயங்களை மேலோட்டமாக பார்ப்போம்.

**(வளரும்)**

